Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

தமிழ் Mirror

WEDNESDAY, APRIL 17, 2024

புதன்கிழமை ஏப்ரல் 17, 2024 | ஒளி: 09 கதிர்: 232 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# தடையை நீக்கியது இந்தியா



இலங்கைக்கான வெங்காயம் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட தடையை இந்தியா நீக்கியுள்ளது. அத்துடன், 10 ஆயிரம் மெட்ரிக் தொன் வெங்காயத்தை இந்தியா இலங்கைக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

தொடர்ச்சி P2

## யாழில் காதலன் அரங்கேற்றிய கொடூரம்



### காதலியும் தாயும் படுகாயம்: காதலன் சடலமாக மீட்பு

எம்.றொசாந்த்

இளைஞன் ஒருவர், தனது காதலியையும் , காதலியின் தாயையும் கூரிய ஆயுதத்தால் வெட்டிய பின்னர் தன்னுயிரை மாய்த்து கொண்டுள்ள சம்பவம், யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## மருத்துவமும் போலி; வைத்தியரும் போலி



நூருல் ஹுதா உமர்

பொதுமக்களின் சுகாதாரத்துக்கு அச்சுறுத்தலாக அமையும் இடங்கள் மீதான தொடர் சுற்றிவளைப்பின் மற்றுமோர் அங்கமாக சட்டவிரோத மருத்துவ நிலையம் ஒன்று சாய்ந்தமருது, பாண்டிருப்பு, மருதமுனை பிரதேசங்களில் செவ்வாய்க்கிழமை (15) அடையாளம் காணப்பட்டு அந்த நிலையத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

### யாழ்.கொவிட் மரணம் தொடர்பில்


# “தேவையற்ற சந்தேகம் வேண்டாம்”



கொரோனா (கொவிட்) தொற்று பற்றிய உலக சுகாதார நிறுவனம் மற்றும் இலங்கை சுகாதார அமைச்சின் ஆலோசனைகள் தொடர்பாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெளிவுபடுத்தியுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் நீண்ட காலத்திற்கு பின்னர் கொரோனோ தொற்று காரணமாக பெண்ணொருவர் உயிரிழந்துள்ள நிலையில் மக்கள் மத்தியில் தேவையற்ற சந்தேகங்களை தீர்க்கும் வகையில் குறித்த தகவலை தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



## திகனையில் மூவர் நீரில் மூழ்கி பலி

தெல்தெனிய கும்புக்கந்துர பகுதியில் விக்டோரியா நீர்த்தேக்கத்தில் மூழ்கி பெண்ணொருவர் உள்ளிட்ட மூவர், திங்கட்கிழமை (05) மாலை உயிரிழந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## “எனக்கு முடியாது”



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்ய தன்னால் முடியாது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தாம் ஜனாதிபதி வேட்பாளரை முன்மொழிந்தால், அதனை எதிர்பார்த்துள்ள ஏனையோர் தம்மிடம் அதிருப்தி அடையலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி ஜனாதிபதி வேட்பாளர் தெரிவை பொதுஜன பெரமுனவின் மத்திய குழுவே மேற்கொள்ள வேண்டும் என மேலும் தெரிவித்துள்ளார்.

## சாமரவின் கார் பற்றி எரிந்தது

ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவின் பயணித்த கார் பண்டாரவளை ஹல்பே பகுதியில் வைத்து திடீரென தீப்பிடித்துள்ளது .

இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை (16) அதிகாலை 12.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2





## யாழில் ஏமாற்றிய கில்லாடி பெண் கைது

### கொழும்பு விசாரணைக்குப் பின்னர் கையளிக்க ஏற்பாடு

எம்.றொசாந்த்

வெளிநாடுகளுக்கு அனுப்பிவைப்பதாக யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்களிடம் சுமார் 2 கோடியே 50 இலட்சரூபாய் பணத்தை மோசடி செய்து , கொழும்பில் தலைமறைவாகி இருந்தபெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## ஜாவத்தை சிறுவன் கம்பளை கிணற்றில் பலி

கம்பளை, அம்பகமுவ வீதியிலுள்ள பழைய பாதுகாப்பற்ற கிணற்றில் தவறிவிழுந்து சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

பண்டிகையைக் கொண்டாடுவதற்காக, தமது உறவினர் வீட்டிற்குச் சென்றிருந்த கொழும்பு-ஜாவத்த பிரதேசத்தில் வசிக்கும் 9 வயதுடைய சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விளையாடிக்கொண்டிருந்த போது, குறித்த சிறுவன் கிணற்றில் வீழ்ந்துள்ளார்.

தொடர்ச்சி P2

## “சம்பள அதிகரிப்பு நகைச்சுவையாகும்”



பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு விவகாரம் தற்போது சில தொழிற்சங்கங்களில் அரசியல் பிரச்சினையாக மாறியுள்ளதாகவும் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பள அதிகரிப்பு நகைச்சுவையாக மாறிவிட்டது என்றும் அகில இலங்கை முற்போக்கு தொழிலாளர் முன்னணியின் தலைவர் இளங்கோ காந்தி தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## “அடுத்தவாரம் முடிவு”

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு தமக்கு பல தரப்பினரிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளதாக நீதியமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஈரான் ஜனாதிபதி 24 அன்று வருகிறார்



ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இம்மாதம் 24ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் இம்மாதம் 24 ஆம் திகதி மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்த திட்டத்தை திறந்து வைப்பதற்காக ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி,

தொடர்ச்சி P2



## பிரபலமான அன்னாசியை பயிரிட ஆலோசனை

உலகின் மிகவும் பிரபலமான அன்னாசி வகைகளில் ஒன்றான MD 2 அல்லது Super Sweet pine apple இலங்கையில் பயிரிடுவதற்கு உடனடியாக பரிந்துரைக்குமாறு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர விவசாய திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

MD 2 Super Sweet pine apple வகைக்கு உலக சந்தையில் அதிக கிராக்கி இருந்தாலும், அந்த அன்னாசி வகையை இலங்கையில் பயிரிட இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

தொடர்ச்சி P2

## யாழில் ஒருவர் திடீரென மரணம்

யாழில் இரத்தப்புற்று நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இளம் குடும்பஸ்தர் தீடிரென உயிரிழந்துள்ளார். இலங்கை போக்குவரத்துசபை முல்லைத்தீவு சாலையில் பணிபுரிந்து வந்த இவர் கடந்த 20

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# யாழில் காதலன் அரங்கேற்றிய கொடூரம்

யாழ்ப்பாணம் - பண்டத்தரிப்பு , பணிப்புலம் பகுதியில் செவ்வாய்க்கிழமை (16) அதிகாலை இடம்பெற்ற சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

இளைஞனும் அப்பகுதியை சேர்ந்த யுவதியும் காதலித்து வந்துள்ளனர். இந்நிலையில் கடந்த சில நாட்களாக காதலர்களுக்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், காதலியின் வீட்டுக்கு சென்று மறைந்திருந்த இளைஞன் , வீட்டார் காலை வீட்டின் கதவை திறந்த வேளை , வீட்டினுள் நுழைந்து , காதலியையும் , அவரது தாயையும் கூரிய ஆயுதத்தால் வெட்டி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

சத்தம் கேட்டு கூடிய அயலவர்கள் வெட்டு காயங்களுடன் காணப்பட்ட தாயையும் மகளையும் மீட்டு , வைத்தியசாலைக்கு அனுமதி வைத்துள்ளனர்.

அந்நிலையில் வீட்டில் இருந்து சற்று தொலைவில் இருந்த காணி ஒன்றில் காதலியை வெட்டியதாக சந்தேகிக்கப்படும் இளைஞன் தனது உயிரை மாய்த்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# திகனையில் மூவர் நீரில் மூழ்கி பலி

திஹாரிய பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட தம்பதியினர் தெல்தெனிய-திகனையில் உள்ள தமது உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்தபோது விக்டோரியா நீர்த்தேக்கத்தில் நீராடச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

23 வயதான கணவன், 22 வயதான மனைவியும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

நீரில் மூழ்கியவர்களைக் காப்பாற்றுவதற்காக நீர்த்தேக்கத்தில் குதித்த திகனை அளுத்வத்த பகுதியைச் சேர்ந்த 37 வயதான நபரும் உயிரிழந்துள்ளார்.

# “சம்பள அதிகரிப்பு நகைச்சுவையாகும்”

தனது இல்லத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 1000 ரூபாவினால் அதிகரிக்கப்படும் என சில தொழிற்சங்கங்கள், மேடைகளில் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன.இவர்கள் பல வருடங்களாக தோட்ட தொழிலாளர்களின் சம்பள பிரச்சினையை தமது அதிகாரத்தை பெறுவதற்காக அரசியலில் வெள்ளையடித்து வருகின்றனர்.

ஆறு மாதங்களுக்கு ஒருமுறை தொழிற்சங்க அங்கத்துவம் மாற்றப்படும் போதோ அல்லது தேர்தல் நெருங்கும் போதோ இதே நாடகம் அரங்கேற்கப்படுகின்றது.

தற்போது தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 1,700 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும் என சிலர் கூறுகின்றனர், ஆனால் பெருந்தோட்டக் கம்பனிகள் எதிர்க்கின்றன.

தற்போதைய வாழ்க்கைச் செலவின் படி, தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த சம்பளம் போதாது, எனவே, இந்த தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என, எமது தொழிற்சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த பெண் தோட்டத் தொழிலாளர்கள் தங்களால் இயன்ற அளவு பறிக்கப்படும் கொழுந்தின் நிறையை அதிகரிப்பதன் மூலம் அவர்களின் வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கலாம். தோட்டக் கம்பனிகளுக்கு நாளாந்தம் கிடைக்கும் தேயிலை கொழுந்தின் நிறையின் அளவை அதிகரிப்பதன் மூலம், தினசரி உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூளின் அளவையும் அதிகரிக்க முடியும். இதனூடாக தோட்டக் கம்பனிகளுக்கு வருமானம் கிடைக்கும் என்றார்.

**“ பெண் தொழிலாளர்கள் பறிக்கும் கொழுந்தின் நிறையை அதிகரிப்பதன் மூலம் அவர்களின் வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கலாம். தினசரி உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூளின் அளவையும் அதிகரிக்க முடியும்.**

அத்துடன், தேயிலை ஏற்றுமதியின் ஊடாக நாட்டிற்குக் கிடைக்கும் அந்நியச் செலாவணி அல்லது டொலரின் அளவு அதிகரித்து நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையும், தோட்டங்களில் பணிபுரியும் ஆண்களின் சம்பளம் குறிப்பிட்ட அளவு அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

இதன் மூலம் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதுடன் தோட்டக் கம்பனிகளின் வருமான நிலைமையையும் உயர் மட்டத்தில் பேண முடியும் என்றார்.




# மருத்துவமும் போலி; வைத்தியரும் போலி

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களுக்கு தொடர்ந்தும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்து கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஷகீலா இஸ்ஸதீனின் ஆலோசனை வழிகாட்டலில் இந்த திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கை இடம்பெற்றது.

இந்த சுற்றிவளைப்பின் போது தன்னை வைத்தியராக அடையாளம் காட்டிக்கொண்டு எவ்வித அரச அங்கீகாரமுமின்றி இயங்கிவந்த மருத்துவ நிலையமும், அழகுக்கலை நிலையமும், பயற்சி நிலையமும் நடத்தி வந்த நபர் இணங்காணப்பட்டதுடன் அவரிடமிருந்த மனித பாவனைக்கு பொருத்தமற்ற மற்றும் ஆபத்தான மருந்துகளும் கைப்பற்றப்பட்டன.

அது மட்டுமின்றி முறையான கல்வித்தகமையோ, தொழில்தகைமையோ இல்லாத குறித்த நபர் மருத்துவ பரிந்துரைகள் மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் அனுமதியில்லாத மருந்துகளை பாவித்து வந்தமையும் இதன்போது கண்டறியப்பட்டதுடன் அவர் மருத்துவராக தன்னை அடையாளப்படுத்திய சான்றுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

கல்முனை மாநகர பிரதேசத்தில் மூன்று கிளைகளைக் கொண்டு இயங்கிய இந்த நிலையம் மனித உயிர்களுக்கும், சுகாதார நிலைக்கும் சவால் விடும் வகையில் இயங்கி வந்தமையை கண்டறிந்து இவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தேவையான மேலதிக நடவடிக்கைகளை சுதாரத்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

**“ மருத்துவ பரிந்துரைகள் மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் அனுமதியில்லாத மருந்துகளை பாவித்து வந்தமையும் இதன்போது கண்டறியப்பட்டது**

இந்த திடீர் சுற்றிவளைப்பில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர்.எம். அஸ்மி, கல்முனை பிராந்திய சுற்றாடல் உணவு பாதுகாப்பு பொறுப்பு வைத்தியதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம். பௌஸாத், கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரியும், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரியுமான டாக்டர் எம்.ஜெ.கே.எம். அர்சத் காரியப்பர், உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகர் எஸ். ஜீவராசா, மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்களான ஏ.எம்.பாறுக், ஏ.எல்.எம். ஜெரின், பொதுச்சுகாதார பரிசோதகர்களான ஜே.எம். நஜிமுதீன், ஐ.எல்.எம். இத்ரீஸ் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# “தேவையற்ற சந்தேகம் வேண்டாம்”

இதன்படி 2023 ஒக்டோபர் 10ம் திகதி முதல் கீழ்வரும் 7 விடயங்கள் சுகாதார அமைச்சினால் சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டு பின்பற்றப்படுகிறது.

1. கொவிட் தொற்று ஏற்பட்டவர்களுக்கு ஏனைய சுவாசத் தொற்று நோய்கள் ஏற்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்ற அதே உரிய பாதுகாப்பும் பராமரிப்பும் வழங்கப்பட வேண்டும். பொருத்தமான சிகிச்சையும் வைத்தியசாலையில் வழங்கப்படும்.

(பொதுவாக சுவாச தொற்று வருத்தம் இன்னொருவருக்கு இலகுவாக பரவலாம். ஆகவே சுவாசத் தொற்று உடையவர்கள் உரிய அடிப்படை சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறே தொற்று உடையவருக்கு அருகில் இருப்பவர்கள் மற்றும் பராமரிப்பவர்கள் உரிய சுகாதார பழக்கவழக்கங்களைப் பேண வேண்டும்.)

2. எதாவது நோய் ஒன்றின் சிகிச்சைக்கு முன்னர் அல்லது சத்திர சிகிச்சை ஒன்றிற்கு முன்னர் கொவிட் தொற்றும் இருக்கின்றதா என பரிசோதனைகள் செய்யப்படுவதில்லை.

3. கொவிட் தொற்று உடையவரிற்கு அருகில் இருந்தவர்களிற்கு அல்லது அவருக்கு அருகில் சென்று சிகிச்சை அளித்தவர்களுக்கு கோவிட் தொற்று இருக்கின்றதா என பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

**“ பிரான்ஸில் இருந்து ஆயுள்வேத சிகிச்சைக்காக வந்த 62 வயதான பெண்ணே கொவிட் தொற்றுக்கு உள்ளான நிலையில் யாழ்ப்பாணத்தில், வெள்ளிக்கிழமை (12) மரணமடைந்தார்**

4. இருமல் மற்றும் தடிமன் போன்ற சுவாசத் தொற்று ஏற்பட்டவர்கள் இன்னொருவருக்கு தொற்று ஏற்படாத வகையில் உரிய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். குறிப்பாக அதிகளவில் ஒன்றுகூடும் இடங்களில் உரிய முறையில் நடந்து கொள்ள வேண்டும்.

5. கொவிட் இறப்பு ஏற்படும் போது உரிய சுகாதார விதிகளைக் கடைப்பிடித்து இறுதிச் சடங்கை செய்யமுடியும்.

6. சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவின் அறிவுறுத்தலின் அடிப்படையில் சமுதாயத்தில் கோவிட் தொற்று இருக்கின்றதா என பலருக்கு பரிசோதனைகள் செய்யப்படுவதில்லை.

7. தனியார் சிகிச்சை நிலையங்களும் இந்த நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.



# தடையை நீக்கியது இந்தியா

இந்த வெங்காய ஏற்றுமதியுடன், இலங்கைக்கான வெங்காயம் மீதான ஏற்றுமதி தடை நீக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

# யாழில் ஏமாற்றிய கில்லாடி பெண் கைது

வெளிநாடுகளுக்கு அனுப்பிவைப்பதாகவும் , வெளிநாடுகளில் வேலை வாய்ப்புக்களைபெற்று தருவதாகவும் , சமூக வலைத்தளங்கள் ஊடாக விளம்பரங்களை செய்து யாழ்ப்பாணத்தை சேர்ந்த பலரிடம் மோசடி செய்துள்ளார்

மோசடி தொடர்பில் யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த வேளை குறித்த பெண் கொழும்பில் தலைமறைவாகி இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

தகவலின் பிரகாரம் கொழும்பு பொலிஸாருக்கு அறிவித்து , பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர்.

கொழும்பிலும் அப்பெண் மோசடிகளில் ஈடுபட்டுள்ளாரா? என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் எனவும் , அதன் பின்னர் யாழ்ப்பாண பொலிஸாரிடம் அவரை கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்

# ஜாவத்தை சிறுவன் கம்பளை கிணற்றில் பலி

எனினும், நீண்ட நேரமாக சிறுவனை காணவில்லையென தேடியபோதே, கிணற்றுக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சிறுவனை உடனடியாக கம்பளை வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், சிறுவன் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

# பிரபலமான அன்னாசியை பயிரிட ஆலோசனை

இந்த நிலையில், குறித்த அன்னாசி வகையை இலங்கையில் பயிரிடும் பரீட்சார்த்த நடவடிக்கை வெற்றியளித்துள்ளதாக அவர் கூறியுள்ளார். அதோடு , குறித்த அன்னாசி வகையை பயிரிடுவதற்கு விவசாயிகளுக்கு பரிந்துரைக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# சாமரவின் கார் பற்றி எரிந்தது

மஹியங்கனையில் இருந்து எல்ல பிரதேசத்திற்கு பயணித்துக்கொண்டிருந்த போதே தீ விபத்து ஏற்பட்டுள்ளது. அப்போது, சாரதியுடன் இராஜாங்க அமைச்சர் இருந்துள்ளார். அவ்விருவருக்கும் எவ்விதமான அனர்த்தங்களும் ஏற்படவில்லை.

சம்பவத்தை அடுத்து விரைந்து செயற்பட்ட பண்டாரவளை மாநகரசபையின் தீயணைப்பு பிரிவினர், எல்ல பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் தீயை கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

# யாழில் ஒருவர் திடீரென மரணம்

நாட்களாக சுகயீனமுற்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையின் அவசர சிகிச்சை பிரிவில் 4 தினங்களுக்கு முன்னர் சிகிச்சை பெற்றுவந்த அல்வாய் தெற்கு உண்டுவத்தைப் பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 50 வயதான தங்கவேல் சதீஸ்குமார் என்பவரே இரத்தப்புற்று நோய் காரணமாக சிகிச்சை பலனின்றி பரிதாபமாக திங்கட்கிழமை (15) மாலை உயிரிழந்துள்ளார்.

# ஈரான் ஜனாதிபதி 24 அன்று வருகிறார்

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக நீர்ப்பாசன மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் ஷசீந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆகியோரின் தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இஸ்ரேல் மீது ஈரான் கடந்த சனிக்கிழைமை (13) வான் வழித்தாக்குதலை நடத்திய நிலையில், பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பதற்றநிலைக்கு மத்தியில் ஈரான் ஜனாதிபதியின் விஜயம் அமையவிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# வடக்கு மாகாண புத்தாண்டு விழா










■ க. அகரன்

வடக்கு மாகாண புத்தாண்டு விழா, வவுனியா நெடுங்கணியில் செவ்வாய்க்கிழமை (16) இடம்பெற்றது.
வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு துறை, வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம், தொழில்துறை திணைக்களம் மற்றும் வவுனியா வடக்கு பிரதேச செயலகமும் வவுனியா வடக்கு வலயக் கல்வி அலுவலகம் இணைந்து நடாத்திய குறித்த நிகழ்வானது நெடுங்கேணி மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.
வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் நிரஞ்சன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம் சாள்ஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டிருந்தார்.
இதன்போது பாரம்பரிய முறையில் விருந்தினர்களை வரவேற்கும் நிகழ்வு இடம்பெற்றதோடு தமிழ்– சிங்கள கலை நிகழ்வுகள், பாரம்பரிய விளையாட்டுக்கள், பாரம்பரிய உணவு கண்காட்சிகளும் இடம் பெற்றிருந்தன.
இந் நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலாளர் சரத்சந்திர, மேலதிக மாவட்ட செயலாளர் தி.திரேஷ்குமார், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் இ.பிரதாபன் மற்றும் முக்கியஸ்தர்கள் மாணவர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.















### காரைதீவு பிரதேச உணவகங்களில்

# திடீர் சோதனை

■ நூருல் ஹுதா உமர்உ

ணவுப்பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொதுமக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சஹீலா இஸ்ஸதீன் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா வஸீரின் ஆலோசனைக்கு இணங்க காரைதீவு பிரதேச பல்வேறுபட்ட உணவுகள் கையாளும் நிறுவனங்கள், மீன் விற்பனை நிலையங்கள், இறைச்சி விற்பனை நிலையங்கள், உணவு கண்காட்சிகள், மற்றும் சமயஸ்தலங்களில் சித்திரை பண்டிகை காலத்தை முன்னிட்டு திடீர் பரிசோதனைகள் இடம்பெற்றன.

உணவங்கள் சுத்தமில்லாது இருத்தல், உணவு கையாளுகையில் முறையான ஒழுங்கீன்மை, நீண்ட நாட்களுக்கு பொருத்தமில்லாதவாறு உணவுகளை குளிர்சாதனப்பெட்டிகளில் தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருட்களின் தரம் போன்றன காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய அதிகாரிகளினால் இந்த கள பரிசோதனையில் பரிசோதிக்கப்பட்டது.

மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் மற்றும் பொது



சுகாதார பரிசோதர்களினால் இதன் போது உணவு மற்றும் நீரினால் பரவகூடிய நோய்கள் தொடர்பான விழிப்புணர்வும் வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டது.



## அன்னை பூபதிக்கு அஞ்சலி...

நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதியின் 36 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டு நிலையில் அவரின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திக்கு வவுனியாவில் செவ்வாய்க்கிழமை (16) அஞ்சலி செலுத்தப்பட்டது.
தமிழ் தேசிய மக்கள் முண்ணனியின் ஏற்பாட்டில் வடக்கு– கிழக்கில் அனைத்து மாவட்டங்களுக்கும் செல்லவுள்ள ஊர்தியானது வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்ட பந்தலுக்கு முன்பாக அஞ்சலிக்காக கொண்டுவரப்பட்டது.
இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்க தலைவி கா. ஜெயவனிதா ஈகைச்சுடரினை ஏற்றி வைத்தார். பின்னர் மலர்மாலை அணிவித்து அடுத்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

க. அகரன

## ரெயிலர்கடை சந்தி – யாழ் பஸ்சேவை ஆரம்பித்து வைப்பு

■ எஸ். தில்லைநாதன்

பொதுமக்களுக்கான போக்குவரத்து சேவையை இலகுபடுத்தும் வகையில் வலிகாமம் வடக்கு வயாவிளான் திக்கம்புரை ரெயிலர்கடை சந்தியில் இருந்து யாழ். நகருக்கான பேருந்து சேவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வயாவிளான் பகுதிக்கு அண்மையில் சென்றிருந்த சமயம் குறித்த பகுதி மக்கள் தமது போக்குவரத்து பிரச்சினையின் அசௌகரியங்கள் குறித்து எடுத்துக் கூறி தீர்வை வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

மக்களின் குறித்த கோரிக்கைக்கு அமைவாக அமைச்சரின் பணிப்புக்கமைய வட பிராந்திய போக்குவரத்து சபை அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு குறித்த சேவையை செவ்வாய்க்கிழமை (16) முன்னெடுக்க ஏற்பாடு செய்திருந்தது.

இதற்கமையவே காலை 07 மணியளவில் குறித்த பேருந்து சேவையை வைபவ



ரீதியாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்துள்ளார்.

இதேநேரம் குறித்த பேருந்து சேவையானது வயாவிளான் சுதந்திரபுரம் ஊடாக வயாவிளான் மத்திய கல்லூரி, ஈழகேசரி பொன்னையா வீதி வழியாக குரும்பசிட்டி, கட்டுவன் சந்தி ஊடாக சென்று தெல்லிப்பளை வைத்தியசாலையை அடைந்து கேகேஎஸ் வீதி வழியாக யாழ் நகரை சென்றடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே வறுத்தலைவிளான் சாந்தை சந்தி வரையிலான சேவையை தையிட்டி ஆவளைச் சந்தி வரை நீடிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் அதற்கான ஆரம்ப வைபவமும் காலை 6.30 மணிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கருத்துப் பரிமாற்றம்

■ எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் மாவட்ட மார்ச் 12 இயக்கத்தின் ஏற்பாட்டில் அரசியல் தலைவர்களுக்கும் மக்களுக்கும் இடையே முக்கியமான கருத்துப் பரிமாற்றத்துக்கான மக்கள் மேடை புத்தளம் மர்ஹூம் கே.ஏ.பாயிஸ் ஞாபகார்த்த கேட்போர் கூடத்தில் 18 ம் திகதி வியாழக்கிழமை காலை 8.45 மணி முதல் இடம்பெறவுள்ளது.

## பாராட்டப்பட்டுப் பத்திரம் வழங்கி கௌரவிப்பு



■ எம். எஸ். எம். நூர்தீன்

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் சமூக பாதுகாப்பு ஓய்வூதிய திட்டத்தில் அதிகமான பயனாளிகளை இனைப்புச் செய்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பாராட்டுப் பத்திரம் வழங்கும் நிகழ்வு காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (16) நடைபெற்றது.

இதில் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின். ஓய்வூதிய திட்டத்தை. 2024ம் ஆண்டில் அமுல் படுத்துவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டுடன் சமூக பாதுகாப்பு ஓய்வூதிய திட்டத்தில் 2023ம் ஆண்டு அதிகமான பயனாளிகளை இணைத்துக் கொண்டமைக்காக. காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் களத்தில் கடமையாற்றும் 4 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பாராட்டப்பட்டுப் பத்திரமும் வழங்கி வைக்கப்பட்டது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் உதய சிறீதர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சமூக பாதுகாப்பு சபையின் மாவட்ட இணைப்பாளர்களான ஏ.எம்.அமீன் வை.எம.இனிகோ உட்பட அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## குளிக்கச் சென்றவர் நீரில் மூழ்கி மரணம்

■ ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - மீ ஓயா ஆற்றில் தனது நண்பர்களுடன் குளிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர், நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

புத்தளம், எருக்கலம்பிட்டி (நாகவில்லு) பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான அபுல் ஹூதா முஹம்மது அப்சிர் ( வயது 38) என்பவரே இவ்வாறு ஞாயிற்றுக்கிழமை (14) மாலை உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

தனது நண்பர்களுடன் சுற்றுலா வந்து, மீ ஓயா ஆற்றில் குளிக்கச் சென்ற போது, நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அங்கிருந்த நண்பர்கள் குறித்த நபரை உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதிலும், அவர் உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

விடுமுறை நாட்களில் தனது நண்பர்களுடன், குடும்பத்தினருடன் குளங்கள், ஆறுகளுக்கு சுற்றுலா செல்வோர் அந்தப்பகுதியிலுள்ள மக்களின் ஆலோசனைகளை பெற்றுக்கொண்டு, குளிக்கும் போது மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும் என புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி தேசமான்ய பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் தெரிவித்தார்.

## சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் தீ

■ ஆ.ரமேஸ், பி.கேதீஸ்

லிந்துலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிறேட்வெஸ்டன் கல்கந்தை தோட்ட பிரிவில் செவ்வாய்க்கிழமை (16) அதிகாலை 02 மணியளவில் திடீர் தீவிபத்து இடம்பெற்றுள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கந்தை தோட்டத்தில் இயங்கிய வரும் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் ஏற்பட்ட திடீர் தீ விபத்து தொடர்பில் விசாரணை செய்து வருவதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்து மின்னொழுக்கு காரணமாக ஏற்பட்டதா? அல்லது நாசகார சதியா என்பது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு அருகிலேயே



மக்கள் குடியிருப்புகளும் உள்ளன. பாரிய வெளிச்சம் ஏற்பட்டதன் பின்னர் புகை நாற்றத்தை மக்கள் உணர்ந்துள்ளனர். அதன்பின்னரே, அக்கம் பக்கத்தினருக்கு தெரிவித்து, தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

அதேநேரத்தில் இந்த தீயினால் சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் கூரை பகுதி பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஆரம்ப கல்வி கற்கும் சிறார்களின் புத்தகங்கள்,உபகரணங்கள் தீயில் கருகியுள்ளன.

## மகனை ஊக்கப்படுத்திய தந்தை பரிதாபமாக மரணம்

புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வின் போது துரதிஷ்டவசமான மரணம், பெல்மடுல்ல பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

பெல்மடுல்ல படலந்த பிரதேசத்தில் நடைபெற்ற புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வில் இடம்பெற்ற மரதன் ஓட்டப்போட்டியில் கலந்து கொண்ட தனது மகனை ஊக்குவிக்க வந்த தந்தை ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அதே பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த தந்தை தனது 16 வயது மகனை பாதுகாக்கவும், ஊக்குவிற்பதற்காகவும் அவருடன் இணைந்து ஓடியுள்ளார். இதன்போது, 60 வயதுடைய தந்தை திடீரென மயக்கமடைந்து மயங்கி விழுந்து பெல்மடுல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பெல்மடுல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யானையின் வடிவத்தை விவரித்த குருடனின் கதையாகும்

பாதாள உலக கோஷ்டியினருக்கு இவ்வளவு ஆயுதங்கள் எங்கிருந்து கிடைத்தன? இது சமீப காலமாக அடிக்கடி பேசப்படும் தலைப்பாகும். இதற்கு, குருடன் யானையின் வடிவத்தை எப்படி விவரித்தார் என்பதை நினைவூட்டும் பதில்களே அவர்களுக்கு கிடைத்தன.

ஆனால் கேள்வியின் ஆழத்தை அடையாளம் காணும் அளவிற்கு முழுமையான பதில் கிடைக்கவில்லை என்பது புலனாய்வாளர்களின் மிகப்பெரிய குறைபாடாகும். அத்தகைய விரிவான பதிலை உருவாக்கத் தவறியதே பிரச்சனையாகும்.

வெல்லவாய நீதிமன்றில் வழக்குப் பொருட்களான உலர் கஞ்சா மற்றும் துப்பாக்கிகள் காணாமல் போன சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நீதவான் நீதிமன்ற அலுவலக உதவியாளர்கள் இருவரிடமும் விசாரணை நடத்தப்பட்ட போது, அவர்கள் 8 துப்பாக்கிகளை திருடி வெளியாட்களுக்கு விற்றது தெரியவந்தது.

துப்பாக்கி ஒன்று இருபத்தைந்தாயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் அதனை வாங்கிய மூவர் உட்பட ஐந்து பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.. மேலும், கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து மூன்று துப்பாக்கிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பாதாள உலக கோஷ்டியினரின் ஆரம்ப காலப்பகுதிக்குச் சென்றால், அரசியல்வாதிகளின் ஆசியுடனும் அவர்களின் பாதுகாப்புடனும் பாதாள உலகம் ஒரு மாபெரும் மரமாக வளர்கிறது. அதன்படி, ஒவ்வொருவரும் அரசியல்வாதிகளை வசைபாடிக்கொண்டே நாட்களைக் கடத்தத் தொடங்கினர். பாதாள உலகைக் கொளுத்த வேறு வழிகள் எதுவும் அவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே பாதாள உலகக்குழுவினர் தாம் விரும்பியவாறு தமது செயற்பாடுகளை தொடர்ந்தனர்.

பாதாள உலகத்தில் ஊழல் செய்யும் சில காவல்துறை அதிகாரிகளுக்கும் தொடர்பு இருப்பது தெரியவந்ததும் பாதாள உலகத்திற்கு அரசியல்வாதிகள் தீனி போடுவது மட்டும் இல்லை என்பது தெரியவந்தது. போர் மூளும் போது சில இராணுவத்தினர் துப்பாக்கியுடன் இராணுவத்தை விட்டு ஓடினர். அவை பாதாள உலகத்திற்கு விற்கப்பட்டன. தப்பிச் சென்ற சில படையினர் பாதாள உலகத்தை வாழ்வதற்கு எளிதான வழியாகத் தேர்ந்தெடுத்து வாடகைக் கொலையாளிகளாக மாறினர்.

மிக அண்மைக் காலங்களில் சில இராணுவ வீரர்கள் இராணுவ முகாமில் இருந்து தப்பிச் சென்று, விரும்பிய இலக்கை வேட்டையாடி மீண்டும் இராணுவ முகாமுக்குத் திரும்புவதும் தெரியவந்துள்ளது. பாதாள உலகம் எப்படி வளர்கிறது என்பது இப்போது தெளிவாகத் தெரிகிறது.

வெல்லவாய நீதவான் நீதிமன்ற வழக்கில் இருந்த துப்பாக்கிகள் வெளியாட்களின் கைகளில் சிக்கிய சம்பவத்தின் மூலம், இந்த நாட்டின் பாதாள உலகம் தாம் படையெடுக்க வேண்டிய ஒவ்வொரு துறையையும் ஆக்கிரமிப்பதில் எந்தளவுக்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகின்றது. பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் மிகவும் ஊழல்மிக்க அதிகாரிகள் குழுவொன்று போதைப்பொருள் வியாபாரிகளுடன் இணைந்து போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் சம்பவத்தை ஒத்ததாகும்.

மோசடியை எல்லாம் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இந்த நாடு சிகாகோவாக மாறுவதற்கு வெகு தொலைவில் உள்ளது. அப்படி ஒரு நாடு உருவானால் நாம் யாரும் பிழைக்க மாட்டோம் ஆகையால், துடைப்பதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

ஒருவரின் மனவலிமையையும் அன்பின் ஆழத்தையும் அவரின் மன்னித்தல் பண்பின் ஊடாகப் புரிந்துகொள்ள முடியும். மன்னித்தல் ஒருவரின் வியாபகமான நெஞ்சத்தின் இயல்பைக் காட்டி நிற்கும். மக்கள் இவர்களோடு இணைவார்கள்.

நண்பர்கள் மத்தியில், சின்னத்தவறுகள் நேர்ந்தாலும் பிரிந்துவிடும் சூழ்நிலைகள் வருவதுண்டு. இந்நிலையில் ஒருவர் செய்த துரோகத்தை, அவரால் பாதிக்கப்பட்டவர் மன்னிப்பது பெரிய விடயம்.

கோபம், குரோதம் போன்றவற்றை எவரும் நிலையாக மனதில் வைத்திருத்தலாகாது. தவறுகளை அடிக்கடி செய்பவர்கள், தாங்கொணா இம்சைகள் செய்பவர்கள் போன்றவர்களைக்கூட பெரும்தன்மையுடன் மன்னித்துவிடும் நபர்கள், பயத்தால் அல்ல; தங்களின் பலத்தைக் காட்டாமல் மன்னிப்பது, அவர்களது சகிப்புத் தன்மையுடன் கூடிய மேலான பண்பாகும்.

இன்று மக்களிடையே குரோதம், வன்மம் எல்லாம் பொறாமையால் மெலெழுகின்றன. தங்களைவிட எவரும் உயர்நிலைக்கு வரக்கூடாது எனும் எண்ணத்துடன் இயங்குபவர்கள் ஏராளம்.

எளியவர்களை வதைத்தலாகாது. மேன்மையான உள்ளம் கொண்டவர்கள், யாவரையும் அரவணைப்பார்கள். இணைந்து வாழத் தெரியாதவர்கள் தனிமைப்படுவார்கள்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்



எம்.எஸ்.எம். ஐயூப்

# இரத்த வெள்ளத்தால் இலாபம் தேடும் அரசியல்

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர், 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாத தாக்குதலைப் பற்றி அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த மாதம் தெரிவித்த கருத்தொன்றினால் அவர் பெரும் பிரச்சினையொன்றில் சிக்கி இருப்பதாக தெரிகிறது.

ஆயினும் இந்த விடயத்தில் அவரது உண்மையான நோக்கத்தை சரியாக புரிந்துகொள்ளாது அவரை ஒரு பலவீனமானவராகவோ அல்லது மடையராகவே கருத முடியாது.

கண்டியில் ஊடகவியலாளர்களிடம் கடந்த மாதம் 22 ஆம் திகதி கருத்து தெரிவிக்கும் போது உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை பின்னால் இருந்து நடத்தியவர்களை தமக்குத் தெரியும் என்றும் நீதிமன்றம் தமக்கு கட்டளையிட்டால் தாம் அதனை வெளியிடத் தயார் என்றும் அவர் கூறியிருந்தார்.

தகவல் தெரிந்திருந்தும் ஐந்தாண்டுகளாக அதனை உரிய முறையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவிக்காமை சட்டவிரோதம் என்றும் எனவே, அவரை கைது செய்ய வேண்டும் என்றும் பலர் கோஷம் எழுப்பினர். எனவே, அவரை விசாரிக்குமாறு பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், இரகசிய பொலிஸாரை பணித்தார். அதன் படி அவர் விசாரிக்கப்பட்டார்.

இந்திய அரசாங்கமே பயங்கரவாத தாக்குதலின் பின்னால் இருந்துள்ளதாகவும் மத்தல விமான நிலையம் போன்ற பாரிய திட்டங்களை இந்தியாவுக்கு வழங்காமையே அதற்குக் காரணம் என்றும் இந்திய இராஜதந்திர அதிகாரி ஒருவர் தமக்கு இந்தத் தகவலை அறிவித்தார் என்றும் மைத்திரிபால , இரகசிய பொலிஸாரிடம் தெரிவித்துள்ளதாக சண்டே டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டு இருந்தது.

இந்த விவகாரம் தொடர்பாக பல அரசியல் கட்சிகள் பல்வேறு கருத்துக்களை தெரிவித்தாலும் ஆளும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவே மைத்திரியின் கூற்றால் மிகவும் மகிழ்ச்சியடைந்திருக்கும். ஏனெனில் அக்கட்சியையே இப்போதும் பலர் இத்தாக்குதலுக்காக குற்றஞ்சாட்டி வருகின்றனர். குற்றச்சாட்டு வேறு பக்கம் திரும்புவது அக்கட்சிக்கு சாதகமாகவே அமையும்.

கொழும்பு, நீர்கொழும்பு மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் ஏழு இடங்களில் கிறிஸ்தவர்களை இலக்கு வைத்து முஸ்லிம் பயங்கரவாத குழுவொன்றால் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல்களால் சுமார் 300 பேர் உயிரிழந்தனர். சுமார் 500 பேர் காயமடைந்தனர். சம்பவம் இடம்பெற்ற நாள்முதல் அரசியல்வாதிகளும் சில ஊடகங்களும் தமக்கு பிடிக்காதவர்களை இதில் சிக்கவைக்க பெரு முயற்களில் ஈடுபட்டனர்.

குண்டுத் தாக்குல்களில் இரண்டை நடத்திய இரு நபர்களின் தந்தையான இப்ராஹீம் என்பவர் 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஜே.வி.பியின் தேசிய பட்டியலில் இருந்தவர் என்றும் எனவே, ஜே.வி.பிக்கும் தொடர்பு இருப்பதாகவும் விமல் வீரவன்ச கூறினார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, இத்தாக்குதலால் மிகப் பெருமளவில் அரசியல் ரீதியாக பயனடைந்தது. அக்கட்சியை ஆதரித்த சில ஊடகங்கள் முழு முஸ்லிம் சமூகத்தையே பயங்கரவாதிகளாக சித்தரித்தன. முன்னாள் மாகாண ஆளுநர்களான ஹிஸ்புல்லாஹ் மற்றும் அசாத் சாலி மற்றும் அப்போதைய அமைச்சர் ரிஷாத் பதியுத்தீன் ஆகியோருக்கு எதிராக பலத்த விமர்சனங்கள் எழுந்து கறுப்பு ஜூலையைப் போன்றதொரு நிலைமையின் விளிம்புக்கே நாடு தள்ளப்பட்டது.

தாக்குதல் இடம்பெற்று ஆறு நாட்களில் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ, தாம் அதேயாண்டு நடைபெறவிருந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாகவும் அதன் மூலம் தேசிய பாதுகாப்பை பலப்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

இத்தாக்குதலின் சூத்திரதாரியை அப்போதை ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான அரசாங்கம் கண்டுப்பிடிக்கவில்லை என்றும் தாம் பதவிக்கு வந்து அவரை கண்டுபிடித்து தண்டனை வழங்குவதாகவும் பொதுஜன பெரமுனவின் தலைவர்கள் மேடைகளில் கூறி வந்தனர்.

இவ்வாறு பொதுஜன பெரமுனவை ஆதரித்த ஊடகங்கள், முஸ்லிம் விரோத பிரசாரத்தோடு கோட்டாவை மகா வீரனாக சித்தரித்ததன் மூலம் அவர் 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இலகுவாகவே வெற்றியடைந்தார். ஆனால் தாக்குதலை திட்டமிட்ட சூத்திரதாரியை கண்டுபிடிக்கும் விடயத்தில் புதிய அரசாங்கம் கையை விரித்துவிட்டது. எந்த விசாரணையையும் கோட்டா புதிதாக ஆரம்பிக்கவில்லை. ஜனாதிபதி மைத்திரிபால நியமித்த ஆணைக்குழுவே தொடர்ந்து விசாரணைகளை நடத்தியது.

அதனை அடுத்து தாக்குதலின் சூத்திரதாரி ஏற்கெனவே கைது செய்யப்பட்டுள்ளார் என்று அரசாங்கம் கூறியது. 2021 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் இதைப் பற்றி பலமுறை கருத்து தெரிவித்த அப்போதைய பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, தடுப்புக் காவலில் இருக்கும் நௌபர் மௌலவியே சூத்திரிதாரி என்று கூறினார்.

இது புதிதாக விசாரணைகள் நடைபெறும் என்றும் சூத்திரதாரி உள்ளிட்ட பல விடயங்கள் தெரியவரும் என்றும் நம்பியிருந்த கிறிஸ்தவ சமூகத்துக்கு பெரும் ஏமாற்றத்தை தந்தது.

சம்பவம் இடம்பெறும் காலத்தில் ரணில் தலைமையிலான ஓர் அரசாங்கம் பதவியில் இருந்தமையால் அக்கட்சி அக்காலத்தில் இந்த விவகாரத்தை ஒரு வித தயக்கத்துடனேயே கையாண்டது. ஜனாதிபதி மைத்திரிபாலவே பாதுகாப்பு அமைச்சராக இருந்தமையால் அவர் மீதே குண்டு வெடிப்பின் சகல பொறுப்புக்களையும் சுமத்த அது முயன்றது.

பின்னர் ஆட்சி மாறியதை அடுத்து அக்கட்சியும் அதன் மூலம் அரசியல் இலாபம் தேட முயன்றது. தமது காலத்தில் கண்டு பிடிக்கப்படாத சூத்திரதாரியை கண்டுபிடிக்குமாறு அக்கட்சி கோட்டாபய அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்தது. 2022 ஆம் ஆண்டு நாட்டைவிட்டு கோட்டா தப்பியோடிய பின்னர் பதில் ஜனாதிபதியாக பதவியேற்ற ரணில், தாம் நிரந்தர ஜனாதிபதியாக பதவியேற்று பிரிட்டனின் ஸ்கொட்லன்ட்யாட் பொலிஸ் மூலம் 21/4தாக்குதலைப் பற்றி விசாரணைகளை ஆரம்பிப்பதாக கூறினார்.

கத்தோலிக்க திருச்சபை அதனை நிராகரித்தது. புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் விக்ரமசிங்க, கிறிஸ்தவ எம்.பிக்களின் ஆதரவை நாடியே தாம் பதவியில் இருக்கும் போது செய்யாத விசாரணையை செய்வதாக இப்போது கூறுகிறார் என்று திருச்சபை கூறியது. எனினும், தாம் ஸ்கொட்லன்டயாட் உதவியை கோரியிருப்பதாக அதே ஆண்டு செப்டம்பர் மாதம் ரணில், யூஎஸ்எய்ட் நிறுவனத்தின் நிர்வாக அதிகாரி சமந்தா பவரிடம் கூறினார். ஒரு வருடத்துக்குப் பின்னர் அதைப் பற்றி ஆராய்ந்த டெய்லி மிரர் பத்திரிகை அவ்வாறு ஸ்கொட்லன்ட்யாட் பொலிஸிடம் எவ்வித கோரிக்கையும் விடுக்கப்படவில்லை என்று செய்தி வெளியிட்டது.

அரச புலனாய்வு சேவையின் பிரதம அதிகாரி சுரேஷ் சலேக்கும் குண்டு வெடிப்புக்களுக்கு தலைமை தாங்கிய தேசிய தவ்ஹீத் ஜமாஅத்தின் தலைவர் சஹ்ரான் ஹாஷிமுக்கும் இடையில் குண்டு வெடிப்புக்களுக்கு முன்னர் 2018 ஆம் ஆண்டு சந்திப்பொன்று இடம்பெறறுள்ளதாக பிரிட்டனின் சனல் 4 என்ற தொலைக்காட்சி கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் செய்தி வெளியிட்டது. இராஜாங்க அமைச்சர் பிள்ளையானின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் அசாத் மௌலானாவுடனான நேர்காணல் ஒன்றின் மூலமே அத்தொலைக்காட்சி அச்செய்தியை வெளியிட்டது.

இது பெரும் சர்ச்சையாகவே, அதைப் பற்றி விசாரிக்க முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ்.ஐ.இமாமின் தலைமையில் குழுவொன்றை ஜனாதிபதி ரணில் நியமித்தார். ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் அக்குழுவுக்கு பணிக்கப்பட்டது. ஆயினும் அவ்வறிக்கை இது வரை சமர்ப்பிக்கப்படவில்லை. ஜனாதிபதியின் தலைமையிலேயே இருக்கும் பாதுகாப்பு அமைச்சு வெளிப்படையான விசாரணைகள் மூலம் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலைப் பற்றி உண்மைகள் ஏற்கெனவே கண்டறியப்பட்டுள்ளதாக அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்தது. அதாவது ஸ்கொட்லான்ட் மற்றும் இமாம் குழு மூலமான விசாரணைகள் கண்துடைப்பா?

பயங்கரவாத தாக்குதலின் பின்னால் பாரியதொரு சதி இடம்பெற்று இருந்துள்ளதாக தாக்குதல் இடம்பெற்ற போது சட்டமா அதிபராக இருந்த தப்புல டி லிவேரா கூறியிருந்தார். இமாம் விசாரணைக்குழுவை நியமிக்கும் போதே அந்தக் கூற்றைப் பற்றியும் விசாரிக்க பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிப்பதாக ரணில் கூறியிருந்தார். அக்குழுவும் இது வரை நியமிக்கப்படவில்லை.

சூத்திரதாரியை கண்டுபிடிப்போம் என்ற தமது வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது கோட்டா அரசாங்கம் தடுமாறிக்கொண்டு இருக்க, கோட்டாவே சூத்திரதாரி என்றதொரு கருத்து எங்கிருந்தோ முளைத்து சமூக ஊடகங்கள் மூலம் பரவியது. அது நடக்க முடியாத விடயமல்ல. ஆனால் அதற்காக எவரும் ஆதாரங்களை முன்வைக்கவில்லை.

சஜித் பிரேமதாசவும் இவ்விவகாரத்தை பற்றி அடிக்கடி பல்வேறு கருத்துக்களை தெரிவிக்கிறார். சம்பவம் இடம்பெற்ற காலத்தில் அமைச்சராக இருந்த அவர் சனல் 4 விவகாரம் தொடர்பாக சர்வதேச விசாரணை வேண்டும் என்றார். இரண்டு நாட்களுக்குப் பின்னர் இரகசிய பொலிஸின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவிடம் விசாரணைகளை கையளிக்குமாறு கூறினார். அதே கால கட்டத்தில் ஸ்கொட்லன்ட்யாட் பொலிஸாரிடம் விசாரணைகளை ஒப்படைக்குமாறு கூறினார்.

இப்போது தாம் பதவிக்கு வந்து இரண்டு மாதங்களில் ஆணைக்குழுவொன்றை நியமிப்பதாக கூறுகிறார்.

சுமார் 300 பேரின் உயிரை காவுகொண்ட ஒரு சம்பவம் அரசியல்வாதிகளின் கையில் பந்தாடப்படுகிறது.

## கடிதங்கள்

### நுகர்வுக்கு பொருத்தமில்லாத மீன் விற்பனை

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுகளில் நுகர்வுக்கு பொருத்தமில்லாத மீன் விற்பனை செய்வதாக, பொது மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பொதுச் சந்தைகள், நடமாடும் மீன் விற்பனை செய்யும் வியாபாரிகள் மீன்களை புதிதாகக் காட்டுவதற்காகவும் நிறையை மோசடி செய்வதற்காகவும் மக்கள் குற்றஞ்சாட்டுக்கின்றனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்கு உட்பட்ட சம்மாந்துறை, கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு நிந்தவூர் அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, திருக்கோவில் மற்றும் பொத்துவில் ஆகிய பிரதேசங்களில் மீன் வியாபாரிகளுக்கு உள்ளூராட்சி மன்றங்களினால் அறிவித்தல்கள் விடுக்கப்பட்டிருந்தும், இதனை மீறி நுகர்வுக்கு பொருத்தமில்லாத மீன்கள் விற்பனை செய்யப்படுகின்றது.

மீன்களை புதிதாகக் காட்டுவதற்காகவும் நிறையை மோசடி செய்வதற்காகவும் அவ்வாறு மோசடி செய்யும் மீன் வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

சமையலுக்கு பின்னரும் மீன்களில் மண் காணப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் குற்றஞ்சாட்டுக்கின்றனர்.

எம்.எஸ்.எம்.ஹனீபா

# 3ஆம் உலகப்போருக்கான அறிகுறிகள்





வோ.இ.டிலக்ஸன்
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

புவிசார் அரசியல் எழுச்சி மற்றும் கொதித்தெழுந்துள்ள பதட்டங்களால் குறிக்கப்பட்ட ஒரு சகாப்தத்தில் மூன்றாம் உலகப் போரின் பயங்கரம் உலகெங்கிலும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. உலகளவில் மோதல்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதாலும் பாரம்பரிய வல்லரசுகளின் கூட்டணிகள் முறிவடைந்து வருவதாலும் உலகம் பல பக்கங்களில் சிதறுண்டு கொண்டே செல்கின்றது. பிரிவினையும் ஆக்கிரமிப்பும் போருக்கான விதைகளாக விதைக்கப்படுகின்ற போதெல்லாம் அவை மாபெரும் உலக போர் எனும் விருட்சமானது வரலாற்றின் முன் பக்கத்து படிப்பினைகளாக மானிடக்குலம் சந்தித்த விடயங்களே அவற்றின் மறு வாய்ப்பினை காலச்சக்கரம் மூன்றாம் முறையும் கண் முன்னே கொண்டு வரப் போகின்றதா?

## ரஷ்யா–உக்ரேன் மோதல்

ரஷ்யாவிற்கு உக்ரேன்னுக்கும் இடையே நடந்து வரும் மோதல் பிராந்திய தகராறுகள் மற்றும் புவிசார் அரசியல் போட்டிகளால் ஏற்படும் ஆபத்துக்களை அப்பட்டமாக வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளது. 2014 ஆம் ஆண்டிலிருந்து உக்ரேன், டொனேட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ் கிழக்கு பகுதிகளில் ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகளுடன் கடுமையான போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றது. இதன் விளைவாக 13,000 ற்கும் மேற்பட்ட உயிர் இழப்புக்களும் பரவலான உட்கட்டமைப்பு சீர்குலைப்புக்களும் தொடர்ந்து கொண்டே செல்கின்றன. இதேசமயம் 2014இல் உக்ரேனின் ஒரு பகுதியான கிருமியாவை, ரஷ்யா தன்னுடன் இணைத்தது, உலக அளவில் மேலும் பதட்டங்களை தீவிர படுத்தியதுடன் அது ரஷ்ய தலைநகர் மாஸ்கோவிற்கு எதிரான சர்வதேச கண்டனங்கள் மற்றும் பொருளாதார தடைகளின் அதிர்வலைகளைத் தூண்டியது. போர் நிறுத்தம் மற்றும் அரசியல் தீர்வை நோக்கி பேச்சுவார்த்தை நடத்துவதற்கான முயற்சிகள் இருக்கின்ற போதிலும் ஆங்காங்கே நடக்கும் சண்டைகள் தொடர்ந்து உயிர்களைக் கொன்று கிழக்கு ஐரோப்பிய பிராந்தியத்தின் உறுதிப்பாட்டை குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றன.

## உலகளாவிய போராட்டங்கள்

ரஷ்யா-உக்ரேன் மோதலுக்கு அப்பால் முக்கிய உலக வல்லரசுகளுக்கு இடையேயான பதட்டங்கள் சமீபத்திய ஆண்டுகளில் ஆபத்தான நிலைகளை எட்டியுள்ளன. இவை ஒரு பரந்த போருக்கான சாத்திய கூறுகள் பற்றிய ஊகத்தை தூண்டுகின்றன. எடுத்துக்காட்டாக அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான போட்டி வர்த்தகத் தகராறுகள், இராணுவ நிலைப்பாடு மற்றும் கருத்தியல் வேறுபாடுகளால் தூண்டப்பட்டுள்ளமையானது. ஒரு புதிய பனிப் போர் பற்றிய அச்சத்தை எழுப்பியுள்ளது. அமெரிக்க பாதுகாப்புத்துறை 2020 ஆம் ஆண்டு காங்கிரஸூக்கு வழங்கிய அறிக்கையில் சீனாவின் இராணுவ வலிமை, இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் விரைவான இராணுவ நவீனமயமாக்கம் மற்றும் விரிவாக்கத்தை எடுத்துக்காட்டியதுடன், இது மேலும் வல்லரசுகளின் மோதல் பற்றிய பயத்தினை தூண்டுகின்றது. இதே போல் ஈரானுக்கும் சவுதி அரேபியாவுக்கும் மத அடிப்படையிலும் பிராந்திய அடிப்படையிலும் உருவாகியுள்ள பிரிவினைகள் மத்திய கிழக்கு பகுதிகளில் உறுதியற்ற தன்மையினை அதிகரித்துள்ளன.

## அணு ஆயுதப் போட்டிகள்

அணு ஆயுதங்களின் பெருக்கம் மற்றும் ஆயுத கட்டுப்பாட்டு ஒப்பந்தங்களின் மீதான குறை மதிப்பு ஆகியவை மூன்றாம் உலகப் போரின் வாய்ப்பைப் பற்றிய எதிர்வுகூறல்களை மேலும் அதிகரித்துள்ளன. 2019ல் இடைநிலை தரப்பு அணுசக்தி ஒப்பந்தத்தின் வீழ்ச்சி, புதிய ஸ்டார்ட் ஒப்பந்தத்தின் நிச்சயமற்ற தன்மை, அமெரிக்கா, ரஷ்யா மற்றும் அணு ஆயுதங்களை கொண்டிருக்கலாம் என கருதக்கூடிய ஏனைய நாடுகளுக்கிடையே ஒரு புதிய ஆயுதப் போட்டியினை மீண்டும் தூண்டியுள்ளது. ஹைபர் சோனிக் ஏவுகணைகள் மற்றும் சைபர் போர் திறன்கள் உள்ளிட்ட புதிய இராணுவ தொழில் நுட்பங்களின் தோற்றம் ஆயுதப் போட்டிக்கு ஓர் ஆபத்தான புதிய பரிமாணத்தை சேர்த்துள்ளது. மேலும் 2021ல் அணுசக்தி விஞ்ஞானிகளினுடைய புல்லட்டின் அமைப்பு டூம்ஸ்டே கடிகாரத்தை 25வது முறையாக புதுப்பித்தமை உலகளாவிய பேரழிவு ஒன்றின் அறிகுறியாக தெரிகின்றது. டூம்ஸ்டே கடிகாரம் என்பது, இரண்டாம் உலகப்போரின் பின் அணு ஆயுதங்களை பயன்படுத்தக்கூடாது என்ற நோக்கத்தில் பல விஞ்ஞானிகள் சேர்ந்து உருவாக்கியது உலக அழிவினை அறிவிக்கும் கடிகாரம் ஆகும்.

## சர்வதேச அமைப்புகளின் வலுவிழப்பு

உலகின் மாபெரும் போருக்கான அறிகுறிகள் ஐரோப்பாவில் அதிகமாக வெளித்தெரிந்து கொண்டிருக்கின்ற இன்றைய காலத்தில், உலகின் முக்கிய அமைப்புகளான ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒப்பந்தங்களுக்கும் அறிக்கைகளுக்கும் அந்த அமைப்புகளை சேர்ந்த உலக நாடுகள் செவிசாய்க்காமல் தம் பகை உணர்ச்சியை தீர்த்துக் கொள்வதற்கான அடுத்தகட்ட போர் ஏற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. ரஷ்யா-உக்ரேன் மோதல் முதற்கொண்டு இஸ்ரேல்- பாலஸ்தீனம் மற்றும் சிரிய உள்நாட்டு போரென நாடுகளுக்கு உள்ளேயும் நாடுகளுக்கு இடையேயும் ஏற்பட்டிருக்கின்ற போர் மற்றும் மோதல்கள் தொடர்பாக, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போர் நிறுத்த ஒப்பந்தங்களை மேற்கொண்டு போர்களை நிறுத்துவதற்கு முயற்சி செய்கின்ற போதிலும் கூட அதற்கான பங்களிப்பை இவ் அமைப்புக்களால் பெற்றுக் கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளது. இது உலக நாடுகள் மத்தியில் இவ் அமைப்புகள் மீதான நம்பிக்கையின்மையை ஏற்படுத்தியுள்ளது. உலக நாடுகளை கட்டுப்படுத்த முடியாத நிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்ற ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற அமைப்புக்களின் வலுவிழப்பு , வல்லரசுகளின் ஆதிக்கத்திற்குள் சிக்குண்டு இருக்கும் ஏனைய உலக நாடுகள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

## ரஸ்ய தலைநகரில் பொதுமக்கள் மீதான தாக்குதல்

2024 மார்ச் 22 ஆம் திகதி அன்று ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் இசை நிகழ்ச்சி நடக்கவிருந்த அரங்கத்தில் 137 பேர் துப்பாக்கித் தாக்குதலால் கொல்லப்பட்டிருக்கின்றனர். இது உலக நாடுகள் மத்தியில் மேலும் பதற்றத்தை ஏற்படுத்தியது. ரஷ்யா எனும் ஏகாதிபத்தியத்தில் கடந்த 20 ஆண்டுகளாக இடம்பெறாத அளவுக்கு மிகக் கொடூரமான தாக்குதலாக இத் தாக்குதல் அமைந்திருக்கின்றது. ஏற்கெனவே ரஷ்யா உட்பட உலக நாடுகள் ஒவ்வொன்றும் தமது ஆதிக்கத்தை நிலை நாட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நேரத்தில், இந்தச் சம்பவம் மேலும் பூகோள அரசியலில் மோதல்கள் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்களை அதிகரித்துள்ளது. குறிப்பாக ரஷ்யா-உக்ரேன் மோதலால் உலக நாடுகள் இரண்டு அணிகளாக பிரிந்து கொண்டே செல்கின்ற இக்காலப் பகுதியில் தலைநகரில் நடந்தேறியுள்ள இச்சம்பவத்தினால் , ரஷ்யாவிற்கு உக்ரேன்ன் சார்பாக நிற்கும் நாடுகளின் மீது சந்தேகப்பார்வை எழுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். ஸ்டேட் குராசான் என்ற ஆயுத அமைப்பு இத்தாக்குதலுக்கு பொறுப்பேற்று இருந்தாலும் கூட, ரஷ்யாவிடமிருந்து இத் தாக்குதலுக்கான எதிர்வினை எப்படி இருக்கப் போகின்றது என, உலக நாடுகள் மத்தியில் கடும் பதற்றம் உருவாகியுள்ளது. இத் தாக்குதலுக்கான பதில் தாக்குதலை ரஷ்யா மேற்கொள்ளுமாக இருந்தால், அது உலகின் மற்றுமொரு மாபெரும் போருக்கான தொடக்கப் புள்ளியாக அமையக்கூடும்.

இவ்வாறாக உலகின் மாபெரும் போர் ஒன்றிற்கான அறிகுறிகள் உலகின் ஏனைய பகுதிகளிலும் எதிர்வரும் காலங்களில் வெளித் தெரியுமானால் மீண்டும் ஒரு ஹிரோஷிமா, நாகசாகியாக சில வல்லரசுகளின் எதிர்காலம் மாற்றமடையக் கூடும். அதிகாரமிடுக்கில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை நாடுகளின் போட்டியினால் உருவாகயிருக்கின்ற உலகளாவிய பதற்றம் உலகப் போருக்கான அபாய ஒலியை கடந்த சில வருடங்களாக ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. இந்த அபாய ஒலியினை நிறுத்துவதற்கு சர்வதேச அமைப்புக்களின் கூட்டு முயற்சியும். வளர்ந்த நாடுகளுக்கு இடையேயான தீர்க்கமான சமாதானத்தை நோக்கிய பேச்சு வார்த்தையும் அவசியமாக அமைகின்றது.



# பிம்புருத்தவேவ பொலன்னறுவையின் பொக்கிஷம்



பிரதாப் தியாகராஜா
ஊடகத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

இரண்டு நாள் விடுமுறை கிடைத்துவிட்டலே எங்கேயாவது சுற்றித் திரிய வேண்டுமென திட்டம் போடும் எனக்கு எத்தனை முறை சென்றாலும் எப்போதும் சலிக்காத ஓர் இடம் எது வென்று கேட்டால் அந்த கேள்வி முடியும் முதலே பொலன்னறுவை என்று பதில் சொல்லிவிடுவேன். பொலன்னறுவை மாவட்டம் என்றதுமே என் எண்ணத்தில் அழகிய பச்சை வயல் பரப்புகள் ஆறுகள், குளங்கள், ஓடைகள், புண்ணியத்தளங்கள், சோழர் கால எச்சங்கள், கோவில்கள், மகாவலி ஆறு என பட்டியல் நீண்டுக்கொண்டே செல்லும், பள்ளிகாலத்தில் கல்வி சுற்றுலா சென்ற நாள் தொடங்கி இன்றுவரை இருபத்திற்கும் அதிகமான முறை சென்று வந்திருக்கின்றேன், அதில் அதிகமானவை தற்போதைய பல்கலைக்கழக நாட்கள். பொலன்னறுவையில் யாரும் உறவானரோ, தெரிந்தவரோ இல்லாது இருந்த நிலையில் தற்போது அங்கு எந்த பகுதிக்கு சென்றாலும் யாரோ ஒருவரின் அறிமுகம் இருக்கின்றது.

அப்படியிருந்தும் கூட கடந்த நான்கு வருடமாக போய் பார்க்கவேண்டும் என்று ஆசைப்பட்டு தொடர்ந்து பணத்திற்கு பல தடைகள் வந்து கடந்த மாதம் பார்த்து இரசித்து வந்த இடம் தான் ‘பிம்புருத்தவேவ’ குளம்.

முதலாவது நாள் யாழ்பாணத்தில் இருந்து காலை 10.30 மணிக்கு கிழக்கு மாகாணத்தின் கல்முனைக்கு செல்லும் பேருத்தில் ஏறினேன் மாலை 5.30 மணியளவில் பொலன்னறுவை மகாவலி குடியிருப்பு திட்டமான வெலிகந்தையில் இறங்கினேன் அங்கிருந்து சில கிலோமீற்றர் தொலைவில் உள்ள கறப்பளை கிராமத்தில் நண்பன் வீட்டில் அன்றைய இரவு பொழுது கழிந்தது.

அடுத்தநாள் காலை 7.30 இற்கு பிம்புறுத்தவேவ குளத்திற்கு செல்வதற்கான என்னுடைய பயணம் ஆரம்பமாகியது. இந்த குளத்திற்கு செல்லவேண்டுமாயின் மோட்டார் சைக்கிள் போன்ற சொந்த வாகனம் இருப்பது சிறந்தது புதிதாக வருபவர்களுக்கு பயண பாதை குழப்பம் ஏற்படலாம் பொலன்னறுவையில் இருந்து 14 கிலோமிற்றர் தூரம் மட்டகளப்புக்கு செல்லும் பிரதான சாலை வழியாக வரும் போது மன்னம்பிட்டி நகரம் வரும் அதிலிருந்து அரை கிலோமீற்றர் தூரத்தில் உள்ள நாற்சந்தியில் வலப்பக்கமாக திரும்ப வேண்டும் அந்த இடம் மட்டகளப்பு சந்தியென்று அந்த பகுதியில் அழைக்கப்டும்.

அங்கிருந்து என்னுடைய வீடியோ காணொளிக்கான பயணவழி அறிமுகத்தை கொடுத்துவிட்டு மோட்டார் சைக்கிளில் கமெராவை பொருத்திவிட்டு பயணத்தை ஆரம்பித்தேன் பயணம் செல்லும் பாதை ஏற்கனவே அறிமுகமான பாதைதான் வலபக்கத்தில் ஏரியோடு சேர்ந்து அந்த சமவெளியில் உயர்ந்திருந்த திம்புலாகலை மலையின் அழகு எப்போதும் இரசிக்க கூடியதுதான். மலையடிவாரத்திற்கு வந்ததும் தென்படும் மூன்று வீதிகளில் நேராக நடுவீதியில் பயணிக்க வேண்டும் அதிலிருந்து கிட்டதட்ட 40 கிலோமீற்றர் தூரத்தை கடக்க வேண்டும் வாகனங்கள் பெரிதாக இல்லாத அமைதியான வீதி நிச்சயமாக பயணங்களை இரசிக்க கூடிய ஒருவராக இருந்தால் அந்த இயற்கை காட்சியை வேகமாக கடக்க மாட்டார்கள் நானும் அப்படிதான் வெறும் 40 வேகத்தில் மோட்டார் சைக்கிளை கட்டுப்படுத்தினேன்.

யாழ்பாணம் போன்ற குழப்பமான இரைச்சலான அடிக்கடி வீதி விபத்து நடக்கும் பகுதியில் வாகனம் செலுத்துவதற்கும் இந்த பாதையில் செலுத்தும் போது வரும் இன்பத்தினை எழுத்திலோ வார்த்தையிலோ, சொல்லமுடியாது உணரத்தான் முடியும்

பாதையின் இருபக்கமும் சூரிய ஒளி நேராக படாதபடியாக நெருக்கமாக படர்ந்த பெரிய மரங்கள், வயல்வெளிகள் என இன்னும் உற்சாகத்தை கொடுத்தது. பாதி தூரம் கடந்ததும் அரங்கவில நகரம் வரும் அதில் அந்த நகரை தாண்டி சாப்பிட பெரிதாக இடங்கள் இல்லாத காரணத்தினால் என்னுடைய காலை உணவை உண்டுவிட்டு பயணத்தை தொடர்தேன். நீண்டநாள் போக ஆசைப்பட்ட இடத்தை நெருங்க நெருங்க பூரிப்பும் ஒருபக்கம் மனதில் பயமும் தொற்றிக்கொண்டது பயம் ஏனென்ற கேள்வி வாசிக்கும் உங்களுக்கு தோன்றலாம் அந்த குளத்தில் வருடத்தில் குறிப்பிட்ட ஒருசில நேரங்களில் மாத்திரமே நீர் நிரம்பி வழியும். இதற்கு முன் சமூக வலைதள காணொளிகளை புகைப்படங்களை பார்த்து வந்து மூன்று தடவைகள் ஏமாந்து திரும்பிய ஏக்கமே அந்த பயம் இந்த முறை நீர் இருப்பதை பலரிடம் கேட்டு உறுதிப்படுத்திகொண்டு வந்தாலும் போகும் வழியில் வேறு வாகனங்கள் தென்படாத காரணத்தினால் அந்த பதற்றம்.

ஒருவழியாக இடத்தை அடைந்ததும் மரத்தின் நிழலில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு மேலிந்து கீழே குளத்தை பாரதேன் ஏன்டா இந்த இடத்தை பார்க்கவா இத்தனை நாள் போராட்டம் என்று துளியும் ஏமாற்றமளிக்கவில்லை அந்த கெமராவில் வீடியோவை மேலிருந்து பதிவு செய்துகொண்டே கீழே இறங்கி நடந்தேன் பெரிய முக்கோண வடிவில் மாதுறு ஓயாவின் கிளை ஆறான குட ஓயாவினை மறித்து கட்டப்பட்டுள்ள இந்த குளக்கட்டில் இருந்து நீர் வழிவது அத்தனை அழகு.

நேரம் மதியத்தை கடந்து சென்று கொண்டிருந்து போதும் என்ற மனநிலை வரவில்லை பாதுகாப்புக்காக நின்றவர்கள் மோட்டார் சைக்கிள் காலையில் இருந்து நிற்கின்றது வந்தவரை காணோம் என்று தேடி வரும் வரை நேரத்தை கடந்துக்கொண்டிருந்தது.

அந்த அணைக்கட்டில் இருந்து நீர் வழியும் போது அதில் உடலை நனைத்து தொடர்ந்து முக்கோண அடுக்குகளில் பக்கவாட்டில் சறுக்கி விளையாடுவதும் மேலே ஏறி நின்று புகைப்படம் எடுப்பது என அன்றைய நாளின் குதூகலத்திற்கு அளவில்லாமல் சென்று கொண்டிருந்து .

ஒருவழியாக நேரம் மதியத்தை கடந்ததும் சரி போதும் என்ற எண்ணம் வந்தவுடன் மேல வந்து சிறிய குடிசை கடை அம்மாவிடம் வாங்கிய சூடான ரொட்டியும் சம்பளும் தேனீரும் அன்றைய பொழுதை திருப்தியாக்கியது.

சுற்றுலா செல்பவர்கள் அடிக்கடி பாதிக்கப்படுவது நீரினால்தான். நீரை அடிப்படையாக கொண்ட சுற்றுலாத்தளங்களில் அழகினை போலவே பெரும் ஆபத்துகளும் உள்ளது. ஆனால் என்னை பொறுத்தவரை நான் சென்று வந்த இடங்களில் குடும்பமாக பாதுகாப்பாக பாதுகாப்பான ஓர் இடமாக இதனை சொல்லுவேன்.

இரவுநேரங்களில் இந்த பகுதியில் முகாமிட்டு தங்கும் போது யானை தாக்குதல்களும் இடம்பெறலாம் என்பதனையும் குறிப்பிட வேண்டும். மகிழ்சியாக குடும்பமாக, நண்பர்களாக பொழுதை கழிக்க பொலன்னறுவையில் இதைவிட வேறு இடமில்லை. என்றும் இந்த பயணம் அழியாத நினைவுகளோடு மனதில் இருக்கும்.



சூரத்

# "ரூ.200 கோடி" சொத்தை தானம் கொடுத்த தம்பதி


குஜராத்தைச் சேர்ந்த ஒரு கோடீஸ்வர தம்பதி தங்களின் ரூ.200 கோடி சொத்தை பொதுமக்களுக்கு நன்கொடையாக அளித்துவிட்டு துறவறத்தை ஏற்றுள்ளனர். மேலும், அவர்கள் விரைவில் ஆன்மீக பயணத்தைத் தொடங்க திட்டமிட்டுள்ளனர்.

குஜராத்தைச் சேர்ந்த ஜெயின் தொழிலதிபர்கள் பவேஷ் பண்டாரி மற்றும் அவரது மனைவி தான் இப்படிச் செய்துள்ளனர். அவர்கள் கடந்த பெப்ரவரி மாதம் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் தங்கள் அனைத்து செல்வங்களையும் மக்களுக்கு நன்கொடையாக அளித்தனர். இந்த மாதம் நடக்கும் மத நிகழ்வில் அவர்கள் முழுமையாகத் துறவு வாழ்க்கைக்குச் செல்கிறார்கள்.

இதற்காக அவர்கள் ஏப்ரல் 22ஆம் திகதி உறுதிமொழி ஒன்றை ஏற்க உள்ளனர். அதன் பிறகு இந்த தம்பதியினர் அனைத்து குடும்ப உறவுகளையும் துண்டிக்க வேண்டும்.. அதாவது குடும்பம் உறவு என யாரையும் கருதக்கூடாது. ஒட்டுமொத்த உலகத்தையும் இவர்கள் குடும்பமாகக் கருத வேண்டும். மேலும், எந்த பொருளையும் இவர்கள் வைத்துக் கொள்ளக்கூடாது என்பதே விதியாகும்.

புதுடெல்லி

# "அழகான இடம் காஷ்மீர்"






சுவிட்சர்லாந்தை விட மிக அழகான இடங்கள் காஷ்மீரில் உள்ளன என்று அகமதாபாத் ஐஐஎம் முன்னாள் மாணவர் சந்தீபன் காஷ்மீரின் புகைப்படங்களை எக்ஸ் சமூக வலைதளத்தில் வெளியிட்டு தகவல் தெரிவித்துள்ளார். காஷ்மீரிலுள்ள நகர், சோன்மார்க், குல்மார்க், பஹல்காம் ஆகிய பகுதிகளில் உள்ள அழகு கொஞ்சும் இடங்களை தனது கேமராவில் படம்பிடித்துள்ளார்.

அந்த புகைப்படங்களை எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள அவர் கூறியுள்ளதாவது: பூமியில் உள்ள சொர்க்கம் காஷ்மீர்தான். நான் சுவிட்சர்லாந்துக்கு சென்றுள்ளேன். ஆனால் சுவிட்சர்லாந்தை விட மிக அழகான இடங்கள் காஷ்மீரில்தான் உள்ளன.

மலைகள், பனிசூழ்ந்த சிகரங்கள், பள்ளத்தாக்குகள் எழில்கொஞ்சுகின்றன. அந்தப் புகைப்படங்களை இங்கு வெளியிட்டுள்ளேன். சுவிட்சர்லாந்தை விட காஷ்மீரில் இயற்கை அழகு கொஞ்சும் இடங்கள் அதிகம் உள்ளன. நாங்கள் ஒரு குடும்பமாக காஷ்மீரின் பல்வேறு இடங்களுக்குச் சென்றோம். நீங்கள்இந்த இடங்களுக்கு வந்தால், மீண்டும் வருவதற்கு விரும்புவீர்கள். பூமியில் உள்ள நிஜமான சொர்க்கம்தான் இது என்று குறிப்பிட்டுள்ளார்.

காசா

# காசாவை தாக்கிய இஸ்ரேல்



சிரியா நாட்டின் தலைநகர் டமாஸ்கசில் அமைந்த ஈரான் நாட்டின் தூதரகம் மீது இஸ்ரேல் படைகள் அதிரடி தாக்குதல் நடத்தியது. இதில், ஈரானின் இஸ்லாமிய புரட்சி படையை சேர்ந்த 3 முக்கிய அதிகாரிகள் மரணமடைந்தனர். இதனால் ஆத்திரமடைந்த ஈரான், இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தப்படும் என சூளுரைத்தது. 2 வாரங்களாக அந்த பகுதியில் பதற்ற நிலை நீடித்தது.

இந்நிலையில், இஸ்ரேல் மீது கடந்த சனிக்கிழமை(13) ஈரான் அதிரடி தாக்குதலில் ஈடுபட்டது. நூற்றுக்கும் மேற்பட்ட நடுத்தர ரக பாலிஸ்டிக் வகை ஏவுகணைகளையும், 30-க்கும் கூடுதலான தரைவழி தாக்குதல் நடத்த கூடிய ஏவுகணைகள் மற்றும் 150-க்கும் மேற்பட்ட ஆளில்லா விமானங்களை கொண்டும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்நிலையில், காசைவையும் இஸ்ரேல் தாக்கியுள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

சிட்னி


## தேவாலயத்தில் நடந்த கத்திக்குத்து

# "ஒரு பயங்கரவாத செயல்"



சிட்னியில் உள்ள அசிரிய தேவாலயத்தில் நடந்த ஆராதனையின் போது கத்தியால் தாக்குதல் நடத்தப்பட்டது.இந்த தாக்குதலின் போது அந்த தேவாலயத்தை சேர்ந்த பிஷப் காயம் அடைந்தார்.இந்நிலையில், இந்த தாக்குதல் மத தீவிரவாதத்தால் தூண்டப்பட்ட பயங்கரவாத செயல் என்று அவுஸ்திரேலிய பொலிஸார் செவ்வாய்க்கிழமை தெரிவித்தனர்.

மேற்கு சிட்னியின் புறநகர் பகுதியான வேக்லியில் திங்கள்கிழமை நேரலையில் ஒளிபரப்பப்பட்ட தேவாலய சேவையின் போது அசிரியன் கிறிஸ்ட் தி குட் ஷெப்பர்ட் தேவாலயத்தின் பிஷப் மார் மாரி இம்மானுவேல் உட்பட குறைந்தது நான்கு பேர் காயமடைந்தனர். இந்த சம்பவம் தேவாலயத்திற்கு வெளியே இருந்த பொலிஸாருக்கும், தாக்கியவரை தங்களிடம் ஒப்படைக்கக் கோரிய பிஷப்பின் சீடர்களின் கோபமான கூட்டத்திற்கும் இடையே மோதல்களைத் தூண்டியது.



பீஜிங்

# இனி செல்போன் டவர்களே இருக்காது

தொலைத்தொடர்பு துறையில் புரட்சியை ஏற்படுத்தும் விதமாக புதிய சாதனை ஒன்றை சீன விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்களாம். தரையில் செல்போன் கோபுரங்கள் (டவர்கள்) இல்லாமல் செல்போன்களில் பேசலாம் என்று கூறப்படுகிறது.

உலக அளவில் தொழில் நுட்ப வளர்ச்சியில் அமெரிக்காவுக்கு சவால் கொடுத்து வரும் நாடாக சீனா உள்ளது. வானிலை, சாட்டிலைட், விமானங்கள் என்று பல்வேறு துறைகளிலும் சீனா படுவேகமாக ஆய்வுகளை நடத்தி வருகிறது.







# கவர்னர்ஸ் கிண்ண குதிரைப் பந்தயத்தில் குதிரை ஓட்ட வீரர் ரவிக்குமார் வெற்றி

**ஆ.ரமேஸ்**

நுவரெலியாவில் இடம்பெற்று வரும் ஏப்ரல் வசந்தகால நிகழ்வினை சிறப்பிக்கும் வகையில் விளையாட்டுத் துறை அமைச்சி மற்றும் "ரோயல் டேப்" கிளப்பினால் வருடாந்தம் நடத்தப்படும் கவர்னர்ஸ் கிண்ணத்திற்கான குதிரைப் பந்தயப் போட்டியில் நுவரெலியா ரேஸ்கோஸ் கிராமத்தை சேர்ந்த குதிரை ஓட்ட வீரர் லோகேந்திரன் ரவிக்குமார் வெற்றி பெற்று சரித்திர சாதனை படைத்துள்ளார்.

நுவரெலியாவில் இடம்பெற்று வரும் ஏப்ரல் வசந்தகால கொண்டாட்டங்களில் குதிரை ஓட்ட பந்தைய போட்டி சிறப்பு அம்சத்தை கொண்டதாகும்.

உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் இவ்வருடத்திற்கான குதிரை ஓட்ட போட்டி ஞாயிற்றுக்கிழமை (14) காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 1.30 மணி வரை நடைபெற்றது.


இப்போட்டிகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டை சேர்ந்த குதிரைப் பந்தய வீரர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

வெற்றிப்பெற்றவர்களுக்கான கேடயம் மற்றும் பரிசுகளை இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் வழங்கினர்.

## கற்பிட்டி உதைபந்தாட்ட தொடர்

# சம்பியனானது யுனைட்டட்

**எம்.யூ.எம்.சனூன்**







கற்பிட்டி பேர்ல்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நோன்புப் பெருநாளை முன்னிட்டு அணிக்கு 07 பேர் கொண்ட கற்பிட்டி உதைபந்தாட்ட லீக்- 2024 தொடர் கடந்த 13 ஆம் 14 ஆம். திகதிகளில் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

கற்பிட்டி நகரில் உள்ள உதைபந்தாட்ட வீரர்கள் ஏலத்தின் அடிப்படையில் பேர்ல்ஸ் , யுனைட்டட் , ப்ளஸி கைஸ் , வெஸ்ட் ட்ரைகர்ஸ் , லேகர்ஸ் மற்றும் ஹைபர் வேல்ஸ் ஆகிய ஆறு அணிகளுக்கு வீரர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதன்படி இறுதிப் போட்டிக்கு கற்பிட்டி பேர்ல்ஸ் அணியும் யுனைட்டட் அணியும் தகுதி பெற்றது. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் இரு அணிகளும் எவ்வித கோல்களையும் பெற்றுக் கொள்ளாமல் போட்டி சமநிலையில் முடிவுக்கு வந்தது.

இதனையடுத்து நடப்பாண்டின் சம்பியனைத் தீர்மாணிக்க பெனால்டி உதை அணிகளுக்கும் வழங்கப்பட்டது.

இதில் யுனைட்டட் அணியின் கோல் காப்பாளர் பர்ஹான் எதிரணியின் இரு கோல்களை தடுத்ததன் காரணமாக யுனைட்டட் அணி 6:5 என்ற பெனால்டி கோல்கள் அடிப்படையில் சம்பியன் கிண்ணத்தை வெற்றி கொண்டது.

சம்பியனான யுனைட்டட் அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் 50,000 ரூபாய் பணமும் இரண்டாம் இடம் பெற்ற பேர்ல்ஸ் அணிக்கு கிண்ணமும் 25,000 ரூபாய் பணமும் வழங்கப்பட்டது.

அத்துடன் தொடரின் சிறந்த கோல் காப்பாளராக யுனைட்டட் அணியின் பர்ஹான், சிறந்த வீரராக ஹைபர் வேல்ஸ் அணியின் அஹதீர், சிறந்த இளம் வீரராக பேர்ல்ஸ் அணியின் ஹிசாம் தெரிவானார்கள்.

இத்தொடரில் அதிக கோல்கள் செலுத்தி இவ்வாண்டின் தங்கக் காலணி விருதை பேர்ல்ஸ் அணியின் ஜாஹித் தன்வசப்படுத்தினார்.

# ஏறாவூரில் ஜனரஞ்சக விளையாட்டு திருவிழா

**ஜவ்பர்கான்**







ஏறாவூர் ஆட்டோ உரிமையாளர்கள் நலன்புரி கூட்டுறவு சங்கத்தின் ஏற்பாட்டில் மாபெரும் ஜனரஞ்சக விளையாட்டு நிகழ்வு மட் / ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை மைதானத்தில் சங்கத்தின் தலைவர் யூ.எல். சுபைதீன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (14) இடம்பெற்றது.

நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளான தேசிக்காய் சமநிலை ஓட்டம்,

சாயப்பானை உடைத்தல், சாக்கோட்டம், யானைக்கு கண் வைத்தல்,மெதுவான துவிச்சக்கர வண்டி ஓட்டம் ,மோட்டார் சைக்கிள் ஓட்டம், சங்கீத கதிரை,வினோத உடை என பல்வேறு விளையாட்டு நிகழ்ச்சிகள் நிகழ்வை அலங்கரித்தன.

ஏறாவூர் மண்ணில் மூன்றாவது முறையாக இவ் ஜனரஞ்சக விளையாட்டு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது .

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 17, ஏப்ரல் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.